# மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
# PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2016

| விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும் | தரம் - 11 | நேரம் : 3மணி |
|---|---|---|

### பகுதி I

❖ **சரியான விடைளைத் தெரிந்து பொருத்தமான கூட்டில் புள்ளடியிடுக.**

1) இலங்கையில் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட பலநோக்கு அபிவிருத்தித் திட்டம் எது?
   1. மகாவலி அபிவிருத்தித்திட்டம் 2. மாவிலாறு திட்டம்
   3. கல்லோயாத்திட்டம் 4. விக்ரோறியா திட்டம்

2) பசுமைப்புரட்சி காரணமாக ஏற்பட்ட பாதகமான விளைவாக கருதப்படுவது எது?
   1. புதிய பயிர்ப்பேதங்கள் உருவாக்கப்பட்டமை
   2. நச்சுத்தன்மையுள்ள விளைபொருட்கள் மக்களால் நுகரப்பட்டமை.
   3. உலக தானிய உற்பத்தி இருமடங்காக அதிகரித்தமை
   4. பண்ணை இயந்திரமயமாக்கல் அதிகரித்தமை

3) “வாழ்வின் எழுச்சி திணைக்களம்” நிறுவப்பட்ட ஆண்டு
   1. 2013 2. 2014 3. 2012 4. 2005

4) மழைவீழ்ச்சியை அளவிட பயன்படுத்தப்படும் அலகு யாது?
   1. செ.மீ 2. மி.மி 3. செல்சியஸ் 4. மீற்றர்

5) PH 5.2 ஆக உள்ள மண்ணை நடுநிலையாக்குவதற்கு அதனுடன் சேர்க்கவேண்டியது.
   1. ஜிப்சன் 2. அமோனியம் சல்பேற்று 3. சுண்ணாம்பு 4. சேதனப்பசளை

6) மாணவர்களால் அமைக்கப்பட்ட மழைமாணியொன்றின் குறைபாடாக உம்மால் சுட்டிக்காட்டப்படக் கூடியது.
   1. திறந்த வெளியான இடமாக இருந்தமை
   2. சமதரையான புல்வெட்டப்பட்ட இடமாக இருந்தமை
   3. நிலத்திலிருந்து மழைமாணி புனலின் உயரம் 30cm ஆக இருந்தமை
   4. கட்டடங்கள் உள்ள இடத்திற்கு அண்மையில் இருந்தமை

7) பூக்கள் உருவாக நீண்ட பகற்காலம் தேவைப்படும் பயிர்க்கூட்டம் யாது?
   1. கோப்பி, ஸ்ரோபரி 2. மிளகாய், தக்காளி 3. கரட், பீற்றூட் 4. கௌப்பி, போஞ்சி

8) களி மண்ணை பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமானதாக்குவதற்கு அம்மண்ணுடன் சேர்க்க வேண்டிய மிகப்பொருத்தமான பொருள்
   1. சேதனப் பொருள் 2. சுண்ணாம்பு 3. மணல்மண் 4. மரத்தூள்

9) மண்மாதிரியொன்றின் ஈரநிறை 25g. இதனை 105$^{o}$c வெப்பநிலையில் நீண்ட நேரம் வெப்பமேற்றியபின் 20g மாறா நிறை கிடைக்கப்பெற்றது. அம்மண்ணின் நீர்ச்சதவீதம் யாது?
   1. 25% 2. 20% 3. 40% 4. 80%

10) பின்வரும் பயிர்களில் பொயேசியே குடும்பம் அல்லாத பயிர் யாது?
1. பயற்றை 2. பாகல் 3. மிளகாய் 4. நெல்

11) புரதச்சத்தை பெற்றுக்கொள்வதற்காக சைவஉணவு உண்பவர்கள் பின்வரும் எக்குடும்பத்தைச் சேர்ந்த தாவர விளைபொருட்களை உண்ணுதல் வேண்டும்.
1. குக்குப்பிற்றேசியே 2. பொயேசியே 3. பேசியே 4. சொலனேசியே

12) விலங்கு வலுவைப் பயன்படுத்தி மண்படுத்தல் செய்வதற்கு ஏற்ற உபகரணமாக கொள்ளக்கூடியது.
1. முட்கலப்பை 2. நாட்டுக்கலப்பை 3. வட்டத்தட்டுக்கலப்பை 4. இறகுக்கலப்பை

13) நாற்றுக்களை மாற்றி நடும் போது வேர்ச்சேதம் அற்றதும், வீரியமான நாற்றுக்களை பெறக்கூடிய நாற்று மேடை வகை யாது?
1. ‘‘டபோக்’’ நாற்றுமேடை 2. தட்டு நாற்றுமேடை
3. உயர் நாற்றுமேடை 4. ‘‘நெரிடோகா’’ நாற்றுமேடை

14) உயர் நாற்றுமேடைகளை சிறப்பாக தொற்றுநீக்கம் செய்வதற்காக உமி வைக்கோல் என்பன படையாக இடப்பட்டு எரித்தல் வேண்டும். இவ் எரித்தலானது எவ்வாறு மேற்கொள்ளப்படும்.
1. காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசையில் எரித்தல்
2. காற்று வீசும் திசையில் எரித்தல்
3. காற்று வீசும் திசையை கருத்தில்கொள்ளாமல் எரித்தல்
4. மேடைகளின் நடுவில் இருந்து எரித்தல்

15) பயிர்நட்டபின் அம்மண்ணில் மேற்கொள்ளப்படும் சகல கருமங்களையும் எவ்வாறு அழைக்கலாம்.
1. பயிர்ப்பராமரிப்பு என 2. ஆரம்ப பண்படுத்தல் என
3. பின்கண்காணிப்பு என 4. இடைப்பண்படுத்தல் என

16) செயற்கை நீர்வடிப்பு முறைகள் மூலம் மண்ணிலிருந்து அகற்ற எதிர்பார்க்கும் மண்ணீர் வகை
1. நிலக்கீழ்நீர் 2. பருகுநீர் 3. புவியீர்ப்பு நீர் 4. மயிர்த்துளைநீர்

17) மிகக்குறைந்தளவு நீரினை வினைத்திறனுடன் பயன்படுத்தப்படும் நீர்ப்பாசன முறை
1. பரவல் நீர்ப்பாசனம் 2. துளி நீர்ப்பாசனம் 3. தூவல் நீர்ப்பாசனம் 4. பாத்தி நீர்ப்பாசனம்

18) பப்பாசி பயிர்ச்செய்கையில் பூரண போசனைக் கலவையை தயாரிப்பதற்கு தேவைப்படும் தனிப்பசளைகள் மூன்றைக் கொண்ட தொகுதி.
1. அமொனியம் சல்பேற்று, சுப்பபொஸ்பேற்று, எப்பாவல அப்பறைற்
2. யூரியா, சுப்ப பொஸ்பேற்று, மியூரியேற்றுப் பொட்டாசு
3. யூரியா, அமோனியம் சல்பேற்று, மியூரியேற்றுப் பொட்டாசு
4. மும்மைசுப்ப பொஸ்பேற்று, சுப்ப பொஸ்பேற்று, யூரியா

19) வளியிலிருந்தும், நீரிலிருந்தும் தாவரங்களுக்கு கிடைக்கும் மாபோசனை மூலகங்களாவன
1. காபன், ஒட்சிசன், ஐதரசன் 2. நைதரசன், பொஸ்பரசு, பொட்டாசியம்
3. நாகம், செம்பு, மக்னீசியம் 4. நைதரசன், ஐதரசன், ஒட்சிசன்

20) பயிர்களின் முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாகவும், தாவரங்கள் வளர்ச்சி குன்றியும், பூக்கள், காய்கள் விகாரமடைந்தும் காணப்பட்டது. இதன் காரணம் யாது?
1. நைதரசன் குறைபாடாகும் 2. பொஸ்பரசு குறைபாடாகும்

3. பொட்டாசியம் குறைபாடாகும் 4. மேற்கூறிய மூன்று மூலகங்களின் குறைபாடாகும்.

21) பின்வரும் களைத்தொகுதியில் ஆக்கிரமிப்புக் களைகளாக கொள்ளக் கூடியது.
A இராட்சத தொட்டாற்சுருங்கி
B பார்த்தீனியம்
C காவிழாய்
D கினிப்புல்
1. A,B,C 2. A,C,D 3. B,C,D 4. A,B,D

22) வெண்டிப் பயிர்களை அதிகளவில் பாதிக்கும் இலை சித்திர வடிவ நோய்
1. பங்கசாகும் 2. வைரசாகும் 3. பக்ரீறியாவாகும் 4. நெமற்றோடாவாகும்.

23) சொலனேசியே குடும்ப பயிர்களைப் பாதிக்கும் பிரதான நோயான பக்ரீறியா வாடல் நோயின் நோய்க்காரணி யாது?
1. றைசோபியம் 2. கொலரோறிக்கம் 3. சூடோமோனஸ் சொலனேசியாரம் 4. பித்தியம்

24) நெற்பயிர்களில் சந்துக்குத்தி (தண்டு கோதி) பூச்சியின் குடம்பிகளால் ஏற்படும் தாக்கத்தின் பிரதான அறிகுறிகள் யாது?
1. குருத்திலைகள் வாடி காணப்படும் 2. பயிர்கள் பாட்டத்தில் சாயும்
3. இலைநுணி கருகிக்காணப்படும் 4. பயிர்கள் மாடுமேய்ந்தது போல் காணப்படும்

25) பாடசாலை வளவில் உள்ள சாய்வான தரையில் மேற்கொள்ளப் பொருத்தமான பயிராக்கவியல் மட்காப்பு முறை.
1. கல்வேலி அமைத்தல் 2. படிக்கட்டுக்கள் அமைத்தல்
3. கான்கள் அமைத்தல் 4. புற்கள் பதித்தல்

26) வித்துக்களில் உறங்குநிலை காணப்படுவதன் காரணமாக பிரதான அனுகூலமாக அமைவது
1. பூச்சித்தாக்கத்தின் பாதிப்பு குறைவடையும்
2. பங்கசு நோய்த்தாக்கம் குறைவடையும்
3. காய்களினுள் வித்துக்கள் முளைக்காதிருக்கும்
4. வித்தின் முளைதிறன் சதவீதம் அதிகரிக்கும்

27) நீண்டகாலம் பாலைப் பழுதடையாது பேணுவதற்கு ஏற்ற முறை யாது?
1. பாச்சராக்கம் 2. கிருமியழித்தல் 3. குளிரேற்றல் 4. தயிராக்கல்

28) மீன்கள் கருவாடிடப்பட்டு நற்காப்புச் செய்யப்படுகின்றன. இங்கு பயன்படுத்தப்படும் நற்காப்பு முறை யாது?
1. புகையூட்டலாகும் 2. கதிர்ப்புக்குட்படுத்தலாகும்
3. மணல் மண்ணில் புதைத்தலாகும் 4. உலர்த்தலாகும்

29) சினைப்பட்ட பசுவிலிருந்து பால் கறப்பது இறுதி இரண்டு மாதங்களுக்கு நிறுத்தப்படும். இக்காலப்பகுதியை எவ்வாறு அழைக்கலாம்?
1. சினைப்பட்ட காலமாகும் 2. வற்றுக்காலமாகும்
3. வேட்கைக்காலமாகும் 4. கன்றீனற்காலமாகும்.

30) மாணவன் ஒருவர் வீட்டில் வளர்த்த கோழிகளின் பூக்களில் கொப்புளங்கள் ஏற்பட்டு பின் கபிலநிற பொருக்காக மாறியிருப்பதை அவதானித்தார். இந்நோயானது யாது?
1. கோழிஅம்மை 2. புல்லோரம் 3. ரனிக்கெற் 4. கொக்சிடியோசிஸ்

31) பின்வரும் எவ்வுணவுப் பங்கீட்டில் அதிகளவு புரதம் சேர்க்கவேண்டும்.
1. முட்டையிட ஆரம்பிக்கஉள்ள கோழிகளுக்கான தீன்கலவை
2. முட்டையிடும் கோழிகளுக்கான தீன்கலவை
3. குஞ்சுகளுக்கான தீன்கலவை
4. வளர்பருவ கோழிகளுக்கான தீன்கலவை

32) இயற்கையில் பால் தயிராக மாற்றமடைய உதவுவது?
1. வைரசு 2. பங்கசு 3. பக்றீறியா 4. மதுவம்

33) விலங்குணவுக் கலவையின் கூறாக மீன்தூள் பயன்படுத்தப்படுகின்றது. மீன்தூள் சேர்க்கப்படுவதன் பிரதான நோக்கமாக அமைவது
1. கொழுப்பை வழங்க
2. கனிப்பொருட்களை
3. காபோவைதரேற்றை வழங்க
4. புரதத்தினை வழங்க

34) றக்டோல் முறைமூலம் வித்து மாதிரியொன்றின் பின்வரும் எவ்வியல்பு சோதிக்கப்படும்.
1. முளைதிறன் சதவீதம்
2. ஈரலிப்பு சதவீதம்
3. உடைந்த வித்துக்களின் சதவீதம்
3. பூச்சித்தாக்கமுள்ள வித்துக்களின் சதவீதம்

35) பின்வருவனவற்றுள் விற்றமின் A ஐ அதிகளவில் கொண்டுள்ள உணவுப்பொருளைக் கொண்ட தொகுதி
1. கரற், பயறு, தக்காளி, பூசணி
2. ஈரல், முட்டைமஞ்சற்கரு, மீனெண்ணை
3. எலுமிச்சை, பப்பாசி, தோடை, நெல்லி
4. தவிட்டரிசி, நிலக்கடலை, மீன், ஈரல், அன்னாசி

36) வித்து உறங்கு நிலை பற்றிய நான்கு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A உயிர் பண்புடைய வித்துக்கு முளைத்தலுக்கு அவசியமான காரணிகள் கிடைத்த போதிலும் அது முளைக்காது இருப்பதே
B பாகல் வித்துக்களின் வித்துறையைக் காயப்படுத்தி நாட்டினால் அவை விரைவில் முளைக்கும்
C நீர் உட்புகவிடா வித்துறை காணப்படுவதே தோடை வித்துக்களின் உறங்குநிலைக்குக் காரணமாகும்.
D சூடான நீரினுள் அமிழ்த்தி பப்பாசி வித்துக்களின் உறங்கு நிலையை நீக்கலாம்.
1. A,B 2. C,D 3. A,C 4. B,D

37) A கத்தரி, தக்காளி, மிளகாய் சொலனேசியே குடும்பப்பயிர்களாகும்
B. பீர்க்கு, புடோல், வெண்டி, ஆகியன குக்குபிற்றேசியே குடும்பப்பயிர்களாகும்
C. கௌப்பி, பயறு, சோயா ஆகியன பப்பேசியே பயிர்களாகும்.
D. எள்ளு, குரக்கன், சோளம் ஆகியன தானியப் பயிர்களாகும்.
பயிர் வகைப்படுத்தல் தொடர்பான மேற்கூறிய கூற்றுக்களுள் சரியானவை யாவை.
1. A,B 2. C,D 3. A,C 4. B,D

38) மீன், இறைச்சி போன்ற உணவுப்பொருட்கள் வெளிச்சூழலில் வைக்கப்படும் போது விரைவில் பழுதடையும். ஆயினும் இவ்வுணவுப் பொருள்களை குளீரூட்டுவதன் மூலம் நீண்ட காலம் பேணக்கூடியதாக உள்ளது. இதன் காரணம்.
1. குளிரூட்டியில் வளி கிடைத்தல் மட்டுப்படுத்தப்படும்
2. அவற்றில் உள்ள நீரின் அளவு குறைவடைதல்
3. நுண்ணங்கிகள் முழுமையாக இறத்தல்
4. நுண்ணங்கிகளின் தொழிற்பாடு மந்தமடைதல்

39) உணவில் கலப்படம் செய்யப்படாததாக உள்ள உணவு யாது?
1. பப்பாசி வித்துக்கள் சேர்க்கப்பட்ட மிளகு
2. நீர்சேர்க்கப்பட்ட பால்
3. அயடீன் சேர்க்கப்பட்ட உப்பு
4. செங்கற்தூள் சேர்க்கப்பட்ட மிளகாய்த்தூள்

40) விவசாயி ஒருவர் தமது விவசாயப் பண்ணையிலே விலங்கு வளர்ப்பு, பயிர்ச்செய்கை ஆகியவற்றுடன் வீணாகிப் போகும் விலங்குச்சாணம் பயிர்க்கழிவுகள் ஆகியவற்றைக் கொண்டு உயர் உயிர்வாயுவை உற்பத்திசெய்தார். இவ்விவசாய முறை
1. கலப்பினப் பயிர்ச்செய்கை
2. ஒன்றினைந்த பயிர்ச்செய்கை
3. விலங்குப் பயிர் சூழற்சி
4. இடைப்பயிர்ச்செய்கை

## விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் - II

❖ **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களுமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01) சந்தையில் காணப்படும் நச்சுத்தன்மையுள்ள விளைபொருட்கள் காரணமாக தற்போது பலர் வீட்டுத்தோட்ட முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

I. வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான நாற்றுக்களைப் பெறுவதற்கு ஏற்ற சாடி நாற்றுமேடை வகைகள் 04 தருக?
II. மேற்படி நாற்றுச்சாடியில் இடப்படும் நாற்றுமேடை ஊடகக் கலவையாக பயன்படுத்தப்படும்பொருட்கள் ( பதார்த்தங்கள் ) யாவை?
III. நாற்றுச்சாடிகளில் இட்டு வயலில் மாற்றி நடத்தக்க இரு மரக்கறிப் பயிர்களைத்தருக?
IV. வீட்டுத்தோட்ட மண்ணை பண்படுத்த பயன்படும் இரு உபகரணங்களைத் தருக?
V. வீட்டுத்தோட்டப் பயிர்களின் வளர்ச்சிக்கு அடிகட்டுப் பசளையாக இடத்தக்க இரு சேதனப் பசளை வகைகளைத் தருக?
VI. இங்கு பூச்சிகளை கட்டுப்படுத்த இரசாயன பூச்சிநாசினிகள் பாவிப்பது நல்லதல்ல என்பதால் பூச்சி விரட்டி பயிர்கள் நடுவது சிறப்பானதாகும். இதற்கான பயிர்கள் 02 தருக?
VII. வீட்டில் காணப்படும் தென்னைகளுக்கிடையில் செய்கை பண்ணக்கூடிய இரு பழப்பயிர்களைத்தருக?
VIII. வீட்டில் பாலுக்காக பசு ஒன்றினை வளர்ப்பதற்கு தீர்மானித்த மலைநாட்டு ஈரவலய பிரதேச மாணவன் தெரிவு செய்யக் கூடிய மாட்டினம் 02 தருக?
IX. குக்குப்பிற்றேசியே குடும்ப பயிர் ஒன்று வீட்டுத்தோட்டத்தில் நடப்பட்டிருந்தால் இதன் காய்களை பாதிக்கும் பிரதான பூச்சியின் பெயரினைத்தருக?
X. மேற்படி பூச்சித்தாக்கத்தினை கட்டுப்படுத்த நீர் கூறக்கூடிய ஆலோசனை யாது?

**02) காலநிலை மாற்றம் காரணமாக சிலகாலங்களில் அதிக வெப்பமாவும் , சிலகாலங்களில் அதிகளவு மழை வீழ்ச்சியும் ஏற்படுவதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது. இது இலங்கையின் பயிர்க்கெய்கை முறையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.**

I. a) தின்னைவேலி விவசாய பண்ணையில் நீர் அவதானித்த காலநிலைக்காரணிகளை அளவிடும் கருவிகள் 04 தருக?
b) மேற்கூரிய கருவிகளினால் அளவிடப்படும் காலநிலைக் காரணிகளை முறையே தருக?
II. a) இரண்டாம் இடைப்பருவ மழை, வடகீழ்ப்பருவப் பெயர்ச்சிமழை கிடைக்கும் கால எல்லைகள் முறையே தருக?
b) சிறுபோகக் காலத்தில் நெல் அறுவடை செய்யும் மாதத்தினை தருக?
III. அதிக மழைவீழ்ச்சி ஏற்படும் காலங்களில் மண்ணில் காணப்படும் நீர்வகைகள் யாவை?

**03) பூச்சி பீடைகளின் தாக்கம் காரணமாக பயிர்விளை பொருட்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. ஒன்றினைந்த பீடைக்கட்டுப்பாட்டின் மூலம் இதனைத் தடுப்பது சிறப்பானதாகும்.**

I. a. பூரண உருமாற்றம் கொண்ட பூச்சியின் வாழ்க்கை வட்ட நிலைகளைத் தருக.
   b. மேற்கூறிய உருமாற்றம் கொண்ட இரு பூச்சியினங்களைத் தருக.
II. a. எப்பிலக்னா வண்டின் தாக்கத்திற்குட்படக்கூடிய இரு பயிர் வகைகளைத் தருக?
   b. தென்னை நீள்மூஞ்சி வண்டின் தாக்க அறிகுறிகளைத் தருக?
III. ஒன்றினைந்த பீடைக்கட்டுப்பாடு என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக?

**04) சேனைப்பயிராக செய்கைபண்ணப்பட்ட நெற்செய்கை பசுமைப்புரட்சியினைத் தொடர்ந்து நெல்லின் இனவிருத்தியும் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பல புதிய நெல் பேதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.**

I. a. புதிய நெற்பேதங்களில் காணப்படும் சிறப்பியல்புகள் நான்கு தருக?
   b. 3மாத, 41/2 மாத நெல்லினங்களை ஒன்று வீதம் முறையே குறிப்பிடுக?
II. a. விதைத்தலுக்கு பயன்படுத்தப்படும் விதைநெல்லில் காணப்படும் சிறப்பியல்புகள் நான்கு தருக.
   b. “டபொக்” நாற்றுமேடை பற்றி சுருக்கமாக விளக்குக.
III. சேனைப்பயிர்ச் செய்கையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும், அவற்றை மேற்கொள்ளும் காலப்பகுதிகளையும் தருக?

**05) பாதுகாப்பு மனைகளில் பளிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம் பீடைத் தாக்கமற்ற, நஞ்சில்லாத விளைபொருட்களை பெற்றுக்கொள்வதோடு, பயிர் நாற்றுக்களையும் உற்பத்தி செய்ய முடியும்.**

I. a. உமது பிரதேசத்தில் நீர் அவதானித்த “பாதுகாப்பு மனைகள்” நான்கைப்பெயரிடுக.
   b. இப்பாதுகாப்பு மனைகள் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் போது ஏற்படும் எல்லைப்படுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
II. a. பாதுகாப்பு மனைகளில் “நீர்மய ஊடகப்” பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் போது தாவரங்களுக்கு ஊட்டச்சத்தினை வழங்கக்கூடிய கலவைகள் இரண்டின் பெயர்களைத் தருக?
   b. மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் ஊடகங்கள் நான்கு தருக?
III. a. தண்டுத் துண்டங்களை வேர்கொள்ளச் செய்ய பயன்படுத்தப்படும் ஓமோன் வகைகள் இரண்டு தருக.
   b. தண்டுத்துண்டங்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படும் பயிர் வகைகள் இரண்டு தருக.

**06) இலங்கையில் சிறுபிள்ளைகளின் உடல்வளர்ச்சிக்கு நிறையுணவாக பாலும், மலிவான விலங்குணவாக முட்டையும் உள்ளன.**

I. a. ஐரொப்பிய மாட்டு வர்க்கங்களின் இயல்புகள் நான்கு தருக?
   b. கனகூள கோழி வளர்ப்பு முறையில் பாவிக்கப்படும் கனகூளத்தில் இருக்கவேண்டிய இயல்புகள் நான்கு தருக.
II. a. நுண்ணங்கிகளைப் பயன்படுத்தி தயாரிக்கக்கூடிய பால் உற்பத்திகள் இரண்டைக் குறிப்பிடுக.
   b. கோழிவளர்ப்பின் அனுகூலங்கள் இரண்டு தருக?
III. a. பால் கறக்கும் காலத்தில் பசுக்களின் முலைகளில் தொற்றக்கூடிய ஒரு தொற்றுநோயைக் குறிப்பிட்டு அந்நோயின் நோயாக்கியைக் குறிப்பிடுக.
   b. கோழிகள் சில குருதி கலந்த கழிச்சலும் உணவுண்ணாமலும் காணப்பட்டன. இக்கோழிகளுக்கு பிடித்துள்ள நோய் யாது? இந்நோய் ஏனைய கோழிகளுக்கு பரவாமல் தடுக்க எடுக்கும் இரு நடவடிக்கைகளைத் தருக?

**07) இலங்கையில் பழங்கள் மனிதப் போசனையில் முக்கிய இடத்தை வகிக்கிற்றது. ஆனால் பழப்பயிர்ச் செய்கையில் பழவிளைச்சலில் 40% மானவை அறுவடையின் பின் இழப்பு காரணமாக வீணாவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.**

I. a. விற்றமின் Cஐ வழங்கக்கூடிய உணவுவகைகள் நான்கு தருக?
   b. புரதக்குறைபாடு காரணமாக குழந்தைகளில் ஏற்படும் நோய்கள் இரண்டு தருக?

II. a. பப்பாசி பழச்செய்கையில் பழஅறுவடையிலிருந்து நுகர்ச்சி வரைக்கும் சேதம் ஏற்படத்தக்க சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
   b. பழவகைகளை நீண்டகாலம் பேணுவதன் இரு அநுகூலங்களைத் தருக?

III. a. பழுதடைந்த உணவு வகைகளை இனம்காணக்கூடிய இயல்புகள் இரண்டு தருக?
   b. பழ உற்பத்திப் பொருட்கள் அடங்கும் போத்தல்களில் ஒட்டப்படும் சுட்டுத்துண்டுகளில் இடம்பெற வேண்டிய நான்கு விடயங்களைத் தருக?

The National e-learning Portal for The General Education